வழங்கி இந்தத் தொழிலை ஊக்குவிக்க வனத்துறையுடன் கலந்தாலோசித்து ஒரு நல்ல முடிவு எடுப்பாரா என கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு.பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2,3 ஆண்டுகாலமாக வனத்துறையிலிருந்து மூங்கில் கூப்பை பெற்று அதை வெட்டி இந்தத் தொழிலுக்கு பயன்படுத்துவது கடினமாக இருந்து வருகிறது. இருந்தாலும்கூட வாரியத்தில் முயற்சிகள் எடுக்கப்பட்டு வனத்துறையின் மூலம் கலந்தாலோசித்து பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கிணங்க வினா எண் 369 திரும்ப எடுக்கப்படுகிறது. டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

369–

குன்னூர் தொகுதியில் குடிசை மாற்று வாரிய வீடுகள் கட்டுதல்

* ***20526*—டாக்டர் எம். கருப்புசாமி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் தொகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் குன்னூர் தொகுதியில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்கள் ஆற்றோரங்களிலும், மலைச் சரிவுகளிலும் குடிசை போட்டு வாழ்ந்து வருகிறார்கள். புயலாலும், மழையாலும், சரிந்து விழுகின்ற மண்ணாலும் அவர்கள்

பாதிக்கப்பட்டிருப்பதால் அவர்களுடைய வாழ்வை மேம்படுத்தும் வகையில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர மறுபரிசீலனை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் நகரிலே குடிசைப் பகுதிகளுக்கு மேம்பாட்டு பணிகள் 1993-94 ஆம் ஆண்டிலே 2.1 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே 1987 முதல் 1993 வரை குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் அமைக்க குன்னூர் நகரில் 500 குடும்பங்கள் பயனடையும் வகையிலும் 6.56 இலட்சங்கள் செலவிடப்பட்டு உள்ளது. எனவே இதைத் தவிர அங்கே நிலங்கள் எடுத்து அதன் மூலமாக குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித் தருகின்ற திட்டம் எதுவும் தற்போது அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சிக்கு சொந்தமான எம்.ஜி.ஆர். நகர், கன்னிமாரியம்மன் கோயில் தெரு, சித்திவிநாயகர் காலனி ஆகிய பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக நடைபாதைகள் அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. அந்த நடைபாதைக்கு அருகில் உள்ள குடிசைகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அந்த குடிசைவாழ் மக்களுக்கு அந்த இடத்திலேயே அரசு சார்பாக வீடுகள் கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா? எதிர்காலத்திலாவது இதனை மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தினுடைய நிதிநிலைமையை அனுசரித்து எதிர்காலத்தில் இது குறித்து பரிசீலிக்கப்படும்.

362–

நத்தம் தாலுகா மருத்துவமனையை விரிவாக்கம் செய்தல்

***10514** திரு. எம். ஆண்டி அம்பலம்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் நகரில் இயங்கிவந்த ஆரம்ப சுகாதார நிலையம் இப்போது தாலுகா மருத்துவமனையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ள தால், கட்டிட விரிவாக்கம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?